

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், அழியாநிலை வருவாய் கிராமத்தில், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்துவரும் குடும்பங்களுக்கு, புதிய வீடுகள் கட்டுவதற்கான இடத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (12.08.2024) பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தவத்திரு பேரூர் ஆதீனம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபரசுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந. திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ. பெரியசாமி, கண்காணிப்பு பொறியாளர் (தலைமையிடம்) ச. செல்வராஜ், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில்

# ஈரோட்டில் ‘கலைஞர் 100 வினாடி வினா’ இரண்டாம் சுற்று மண்டல அளவிலான போட்டி!

### அமைச்சர் சு.முத்துச்சாமி - மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் பங்கேற்பு!

ஈரோடு, ஆக. 13-

தி.மு.க. மகளிர் அணி மற்றும் கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் நடைபெறும் ‘கலைஞர் 100 வினாடி வினா’ போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி 10.08.2024 ஈரோடு பிளாட்டினம் மஹாலில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை துறை அமைச்சருமான சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர். கழக மாணவர் அணித் தலைவர் ராஜீவ்காந்தி போட்டியைத் தொகுத்து வழங்கினார்.

வினாடி வினா போட்டி, 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதிற்கு மேலானவர்களுக்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஈரோடு மண்டலத்தில் (ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல்) ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த முதல் சுற்று இணையவழி போட்டியில் வெற்றி பெற்றவர்கள் பங்கேற்றனர். 18 வயதுக்குட்பட்ட பிரிவில் சேலம் அணி மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட பிரிவு (பொதுப் பிரிவு) கரூர் அணி வெற்றி பெற்றது. தமிழ் மொழி, இலக்கியம், திராவிட வரலாறு, கலைஞர் ஆற்றிய பணிகள் குறித்து வினாடி வினா கேள்விகளுக்கு ஆர்வத்துடன் போட்டியாளர்கள் பதில் அளித்தனர்.

அமைச்சர் சு.முத்துசாமி பேசியது.

திமுக மகளிர் அணி சார்பாக மிகவும் அருமையாக நிகழ்ச்சி, வேறு எந்த அரசியல் கட்சியும் இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்தி இருக்காது. நல்ல ஆக்கப்பூர்வமான பல செய்திகளை, தலைவர்களை, கொள்கைகளை பற்றி மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு இது ஒரு அடிப்படையான நிகழ்வாக இருக்கிறது. ஒரு அரசியல் கட்சி, இவ்வளவு தெளிவான நிகழ்ச்சியை நடத்துவது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விசயம் என்று பேசினார்.

நிகழ்வில் கழக மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, ஈரோடு மாநகர செயலாளர் சுப்பிரமணியம், மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளரும் , சட்டமன்ற உறுப்பினருமான தமிழரசி ரவிக்குமார், மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளர்கள் சத்யா பழனிகுமார், ரேகா பிரியதர்ஷினி, கழக சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா, தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, மகளிர் தொண்டரணி தெற்கு மாவட்ட அமைப்பாளர் பேபி, மாநகர மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி, மகளிர் தொண்டரணி மாநகர அமைப்பாளர் லீலா மற்றும் மாவட்ட மகளிர் அணி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், மாணவ, மாணவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த வினாடி வினா போட்டியை கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க. ஸ்டாலின் தனது X தளத்தின் வாயிலாகத் தொடங்கி வைத்தார். ‘kalaingar100.co.in’ என்ற இணையதளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று இணையவழி போட்டிகள் தொடங்கியது. முதல் சுற்று இணையவழி வினாடி வினா செப்டம்பர் 15, 2024 அன்று தொடங்கி அக்டோபர் 25, 2024 வரை நடைபெறுகிறது. 18 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டி மற்றும் 18 வயதிற்குப்பட்டோருக்கான போட்டிகளாக நடைபெறும்.

இரண்டாவது சுற்று மண்டல போட்டி 12 மாவட்டத்தில் நடைபெறுகிறது. தூத்துக்குடி விருதுநகர் மதுரை தர்மபுரி, ராணிப்பேட்டை ஆகிய மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி முடிவடைந்தது. மண்டலத்தின் வெற்றியாளர்கள் சென்னையில் நடைபெறவுள்ள அரையிறுதிக்கு முன்னேறுவார்கள்.

கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கைகளால் பரிசு வழங்கப்படும்.

இரு பிரிவுகளிலும் இறுதிச் சுற்றில் வெற்றி பெறும் அணிகளுக்கு தலா ரூ.10 லட்சமும், 2ஆம் இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.6 லட்சமும், 3ஆம் இடத்தைப் பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.3 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப் படுகிறது. வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குக் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்குகிறார்.

### ஏற்கனவே அறிவித்தபடி ஆயுர்வேத மாணவர்களுக்கு

# ரூ.20 ஆயிரம் ஊக்கத் தொகையை உடனே வழங்குக!

### புதுச்சேரி சட்டப் பேரவையில் இரா.சிவா வலியுறுத்தல்!



புதுச்சேரி, ஆக. 13 -

ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு முதல்வர் உயர்த்தித் தருவதாக சொன்ன ஊக்கத் தொகை ரூ. 20 ஆயிரத்தை உடனடியாக வழங்க புதுச்சேரி சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தினார்.

அவர் பேசியதாவது:

புதுச்சேரி மாநிலம், மாஹேயில் உள்ள ராஜிவ் காந்தி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு 4 ஆண்டுகள் மருத்துவம் பயின்று 5-ஆம் ஆண்டில் ஒரு வருட பயிற்சி அளிக்கப்படுவது வழக்கம். அந்த பயிற்சி காலத்திற்கு அம்மாணவர்களுக்கு ரூ. 5 ஆயிரம் ஊக்கத் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் எம்.பி.பி.எஸ். பயிற்சி பெறும் மருத்துவ மாணவர்களுக்கு ரூ. 20 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஆயுர்வேத மருத்துவ மாணவர்கள் தங்களுக்கும் ஊக்கத் தொகை உயர்த்தி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர்.

இதனிடையே கடந்த 2022-ஆம் ஆண்டு கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற நமது முதல்வர் அவர்கள் மாணவர்கள் மத்தியில் பேசும்போது, ஆயர்வேத பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை ரூ. 20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் இரண்டு ஆண்டாகியும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் பயிற்சி மாணவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் போராட்டமும் நடத்தினர்.

ஆனால் இதுவரை அரசு அந்த மாணவர்களின் கோரிக்கையை பரிசீலிக்கவில்லை. மேலும், அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.5 ஆயிரம் ஊக்கத் தொகையும் மாதா மாதம் வழங்காமல், ஐந்து மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுகிறது.

ஆகவே, ஆயுர்வேத மருத்துவ மாணவர்களுக்கு உயர்த்தி வழங்குவதாக அறிவித்த ரூ. 20 ஆயிரம் ஊக்கத் தொகையை முதல்வர் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பதாக இந்த அவையில் உறுதியளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்.பி. சற்குணபாண்டியன்

## ஆகஸ்ட் 13 (2016)



‘மாணவி சற்குணம்’ என்ற பெயரில் கழக மேடைகளில் பேசி வந்த சற்குணபாண்டியன் சிறுமியாக இருந்தபோதே, கழகக் கொள்கைகளை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டவர். இவரது தந்தை பழம் பெரும் சுயமரியாதைக்காரரான பொன்னுசாமி அவர்களால் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்பட்டு, திராவிட இயக்கத்தின் தீபமாய், மாதர்குல திலகமாய் விளங்கியவர்.

“சொல்லின் செல்வி” என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இவர், மாணவரணி, மகளிர் அணி, வடசென்னை மாணவரணி, சென்னை மாவட்ட மகளிர் அணி, மாநில மகளிர் அணியின் செயலாளர் என்று படிப்படியாகப் பொறுப்பேற்று, கழக துணைப் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார்.

1971இல் சென்னை மாநகராட்சிக்கு நியமன உறுப்பினராகவும் – 1989, 1996 ஆகிய இரண்டு முறை சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1996ல் தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார்.

மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் மண்டல மகளிர் மாநாடு நடத்தி ஒன்றிய, நகர மகளிர் அமைப்புகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

17.9.1988 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி ஊர்வல அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான மகளிரைப் பங்கேற்கச் செய்து ஊர்வலத்திற்கு சிறப்பு சேர்த்ததன் காரணமாக சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேசிய முன்னணித் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் திருக்கரத்தால் தங்கச் சங்கிலி பரிசு பெற்றவர்.

திருச்செந்தூர் நீதிகேட்டு நெடும்பயணத்தில் தலைவர் கலைஞருடன் பயணம் மேற்கொண்டவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் மகளிர் படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி சிறை சென்றவர்.

இளம் பிராயத்திலிருந்து இவருக்கு இயக்கத்திலிருந்த ஆர்வத்தையும், தியாகத்தையும், பேச்சாற்றலையும் பாராட்டும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் (1990) தலைமைக் கழகத்தின் சார்பில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கோவை மாநகர் மாவட்ட மருத்துவ அணி சார்பில்

# பீளமேட்டில் இலவச ரத்ததான முகாம்!

### நா.கார்த்திக் - கணபதி ராஜ்குமார் எம்.பி. துவக்கி வைத்தனர்!

கோவை, ஆக. 13 -

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட மருத்துவ அணி மற்றும் பீளமேடு பகுதி1 திமுக சார்பில், பீளமேடு அகிலாண்டேஸ்வரி கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இரத்ததான முகாமை கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கணபதி ராஜ்குமார் எம்பி., ஆகியோர் துவக்கி வைத்தனர் பீளமேடு பகுதி1 செயலாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் தலைமையில்,

கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் கோகுல்,மாநகர் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர். பிரதீப்குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ் கல்பனா செந்தில்,

தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், வி.ஜி. கோகுல், மணிசுந்தர்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்பிரமணியம், ஆனந்த குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், ஆடிட்டர் சசிகுமார், நோயல் செல்வம், ச.குப்புசாமி,ச.கார்த்திகேயன், வழக்கறிஞர் ஆர்.விஜயராகவன், பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.சிவா,இரா. சேரலாதன், அணிகளின் அமைப்பாளர்கள் இரா. தனபால், இலா.தேவசீலன் ஸ்ரீ சத்யா கோவை தங்கம், எமரால்டு பொன்னியின் செல்வன் துணை அமைப்பாளர் க. மணிகண்டன் , லாரா பிரேம்தேவ் எஸ். எம். எஸ். சுதாகரன், நாகவள்ளி கஸ்தூரி அருண்,கே. சி. ரமேஷ் குமார், பாலச்சந்தர், மகாலிங்கம், விஜயராகவன்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஆ.மாடசாமி, ஏ.எஸ். நடராஜ், மா. சிவக்குமரன், தி.இளங்கோவன், ஷண்முகம், சுரேஷ்,

மாமன்ற உறுப்பினர்கள் அம்பிகா, சித்ரா டாக்டர்.சஜீவ்ரங்கசாமி, பூவை. சுரேஷ்,பூ.வெ.துரை சாமி, எஸ்.பி.அருள்குமார், தாமஸ் துரை, சம்பத்குமார், சங்கர், தளபதி கார்த்தி, ஈஸ்வரன், வெங்கடேஷ், தினேஷ், ரஞ்சித், பரத், ஹரிஷ், கூடலிங்கம், அம்சராஜ், ஆனந்தி, ரத்தினம், துரைமணி, நாகஜோதி, கோகிலாமணி, அன்பழகன், மகேஷ், கண்ணன், மகாலிங்கம், சதீஷ், கோகுல், கார்த்திக், சரவணன், வேலுசாமி, சசிகுமார், பிரதீஷ், காந்திமதி, வாசுதேவன், கோவிந்தராஜ், கார்த்திக், திலகவதி, அன்பரசி,RSபுரம்பூபாலன் கழக நிர்வாகிகள் கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிபட்டியில் உள்ள வைகை அணை அருகே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.162.43 கோடி மதிப்பீட்டில் ஆண்டிபட்டி கடமலைக் குண்டு, மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 250 ஊரக குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் காணொளி காட்சி மூலம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் ஷஜீவனா, ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டனர். உடன் தேனி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் – வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கரவர்த்தி, மேற்பார்வை பொறியாளர் முரளி மனோகர், நிர்வாக பொறியாளர் ராமச்சந்திரன், உதவி நிர்வாகப் பொறியாளர்கள் நடராஜன், ராஜேஷ் மற்றும் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.